## வந்தவாசி நகரமன்றக் கூட்டம்
## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

30.11.2020–ம் தேதி திங்கள் கிழமை மாலை 5.00 மணிக்கு நடைபெற்ற வந்தவாசி நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : ச.பார்த்தசாரதி,பி,ஏ.,
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், வந்தவாசி நகராட்சி.

பொருட்கள்

குறள் :

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக.

**152.** வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட காஞ்சிபுரம் சாலையில் சலிமுல்லகான் என்பவருந்து சொந்தமான 26கு எண் கொண்ட கட்டிடத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படுத்திட நகரமன்ற தீர்மான எண்.76. நாள்.31.05.2013 முதல் மாத வாடகை ரூ.6000/-ம் மற்றும் மின் கட்டணம் ரூ.1000/-ம் ஆக மொத்தம் ரூ.7000/- செலுத்திட மன்றம் தீர்மானிக்கப்படும் 01.06.2013 முதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டிடம் பழமை வாய்ந்த கட்டிடம் என்பதாலும் பழுதடைந்த நிலையில் உள்ள கட்டிடம் என்பதாலும் எந்த நேரத்திலும் கட்டிடம் இடிந்து விழுந்து பொதுமக்களுக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலையில் கட்டிடம் உள்ளதால் அக்கட்டிடத்தை காலி செய்து தருமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் காலி செய்யுமாறும் வழக்கறிஞர் திரு.கிஷோர்பாட்ஷா LLB, LLm என்பவர் மூலம் கடிதம் வரப்பெற்றுள்ளது. மேலும் இதன் தொடர்ச்சியாக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் மற்றும் வேலூர் மண்டல நகராட்சியின் இயக்குநர் அவர்களுக்கும் கட்டிடத்தை காலிசெய்யுமாறு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும் துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் (பொ) செய்யாறு அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போது நிலவிவரும் கொரானா தொற்று நோயின் காரணமாக பொதுமக்கள் வருகை அதிகமாக உள்ளதால் தற்போது இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தில் போதுமான இடவசதி இல்லாததால் வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட புதியபேருந்து நிலையத்தில் காலியாகஉள்ள கட்டிடத்தில் தற்காலிகமாக ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிட காலியாக உள்ள கட்டிடத்தை தருமாறு கோரியுள்ளதற்கிணங்க நிர்வாக நலன் கருதியும். மக்கள் நலன் கருதியும். வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள கட்டிடம் ஒன்றினை ஆரம்ப சுகாதார நிலையம் தற்காலிகமாக இயங்கிடவும் அனைத்து வசதிகள் மற்றும் மின் கட்டணம் உட்படவும். துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும். துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் செய்யாறு அவர்களிடம் ஒப்படைக்கவும் சான்று அனுமதிக்க வைக்கப்படுறிது.

அலுவலககுறிப்பு–

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.நிர்வாக நலன் கருதியும், மக்களின் நலன் கருதியும் புதிய பேருந்து நிலையத்தில் காலியான உள்ள கட்டிடத்தில் தற்காலிகமாக ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கிடவும் அனைத்து வசதிகளும் மின்கட்டணம் உட்பட துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் செய்யாறு அவர்கள் செய்துகொள்ளவும். தீர்மானிக்கப்படுகிறது.

(ந.க.எண் 459/2020/இ1)

153. வந்தவாசி நகராட்சியில் சேகரமாகும் மக்காத குப்பைகள் Secondary Collection மூலம் எச்சூர் உரக்கிடங்கில் சேகரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் அவ்விடத்தில் குப்பைகள் அதிக அளவு உள்ளதால் வாகனம் மூலம் குப்பைகள் தள்ளுவது சிரம்மாக உள்ளது என ஒட்டுநர்கள் புகார் தெரிவித்த வண்ணம் உள்ளதாலும் குப்பைகளை அப்பகுதியில் உள்ள விஷமிகள் தீயிட்டு எரிப்பதாலும் புகை மூட்டம் ஏற்பட்டு அவ்வழியே செல்லும் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக உள்ளது. மேலும் FSTP பணிக்கு செல்லும் வழி என்பதால் அதற்கும் இடையூராக உள்ளதால் நகராட்சியில் குப்பை தள்ள JCB வாகனம் இல்லாத காரணத்தாலும் மழைக்காலம் என்பதாலும் அவசர அவசியம் கருதி நகராட்சி மூலம் JCB வாகனம் வாடகைக்கு அமர்த்தி குப்பைகளை ஒன்றாக சேர்த்து விடவும் JCB வாகனம் அமர்த்தி பணி செய்திடவும் இதற்குநகரமன்ற அனுமதி பெற்று தொகை வழங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.48,000/- மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

<u>அலுவலககுறிப்பு—</u>

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1913/2020/எச்1)

154.வந்தவாசி நகராட்சி அலுவலகத்தில் பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகனம் TN97/Y/1267 பழுது ஏற்பட்டுள்ளதை அவசரம் அவசியம் கருதி நிர்வாகநலன் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி பிரிவு 15ன் கீழ் செலவினம் ரூ.9300/- மேற்கொண்டது மன்றம் பதிவிறகு வைக்கலாம்.

<u>அலுவலககுறிப்பு—</u>

1.மன்றம் அனுமதி வழங்கலாம்.

2.பொதுசுகாதார வாகனம் TN97/Y/1267 பழுது ஏற்பட்டுள்ளதை அவசரம் அவசியம் கருதிபிரிவு 15ன்கீழ் செலவினம் ரூ.9300/-மேற்கொள்ளப்பட்டது மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1987/2020/எச்1)

155. வந்தவாசி நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் வாகனம் TN25/BX-1193 திடீர் பழுது ஏற்பட்டதால் அவசரம் அவசியம் கருதி பொது சுகாதார அவசியம் கருதி உடன் சரிசெய்யப்பட்டது. பட்டியல் தொகை ரூ.5770/-- திரு.எம்.கோபிநாத், ஒட்டுனர் என்பவர் வழங்கப்பட்டதால் செலவினம் தொகை ரூ.5770/-ஐ பிரிவு 15ன் கீழ் வழங்கிட மன்றம் பதிவு செய்யலாம்.

<u>அலுவலககுறிப்பு—</u>

1.மன்றம் பதிவு செய்யலாம்.

2.அவசரம் அவசியம் கருதியும், பொதுசுகாதாரம் அவசியம் கருதியும் செலவினம் மேற்கொள்ளப்பட்ட தொகை ரூ.5770/-ஐ பிரிவு 15ன்கீழ் வழங்கிட மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1988/2020/எச்1)

156.வந்தவாசி நகராட்சி 2019ம் ஆண்டு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் எவரும் இல்லை என்ற சான்று மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டுவசதி அமைச்சக்கத்தின் சான்று பெற்றுள்ளது. தற்போது இந்நகராட்சியில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொதுகழிப்பறைகள் கட்டுதல் பணிகள் மேற்கொண்டு முழுமை அடைந்த நிலையில் தற்போது திறந்தவெளி கழிப்பிடமற்ற நகராட்சியாக அறிவிக்க ODF+க்கு 30.10.2020 அன்று மன்றத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு, மக்களின் ஆட்சேபணைகளுக்காக 30.10.2020 அன்று செய்திதாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு ODF+ விண்ணப்பிக்க முன்மொழிவுகள் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு:-</u>

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

(ந.க.எண்.2410/2017/எச்1)

157. கோவிட் 19 கோரானா வைரஸ் தொற்று காரணமாக உள்ளாட்சி நிறுவனங்களின் அமைப்புகளில் கடைகள் மற்றும் ஆண்டு குத்தகைதாரர்களின் நலன் கருதி அரசாணை எண்.298, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.09.2020ன் படி நகராட்சியின் கடை குத்தகைதாரர்கள் மற்றும் ஆண்டுகுத்தகைகளின் குத்தகைதொகையை 4/2020 மற்றும் 5/2020 இரண்டு மாத குத்தகை தொகையை குத்தகைதாரர்கள் செலுத்துவதற்கு விலக்கு அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே அரசாணை எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 02.09.2020-ஐ மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. மேலும் அரசாணைக்கிணங்க கீழ்கண்ட குத்தகை இனங்களில் குத்தகை தொகை இரண்டு மாதங்கள் (4/2020 மற்றும் 5/2020) குத்தகை தொகையினை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. பழைய பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பறை
2. புதிய பேருந்து நிலையம் நவீன கட்டண கழிப்பறை
3. காஞ்சிபுரம் சாலையில் உள்ள ஆடு அறுக்கும் தொட்டி
4. பேருந்துகளுக்கு சுங்க கட்டணம்
5. புதிய பேருந்து நிலைய இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் சுங்கம் வசூலித்தல்.

<u>அலுவலககுறிப்பு:-</u>

1. அரசாணையின்படி எண்.296, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.02.09.2020 குத்தகைதாரர்கள் குத்தகை தொகை 04/2020 மற்றும் 05/2020 இரண்டு மாதங்களுக்கு குத்தகை தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2429/2020/சி1)

158. வந்தவாசி நகராட்சி பொதுசுகாதார பிரிவிற்கு எச்சூர் உரக்கிடங்கில் குப்பைகள் நிரம்பி லாரி செல்ல முடியாத் காரணத்தால் 16.10.2020-ல் விலைப்புள்ளி கோரியதில் 20.10.2020-ல் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் JCB இயந்திரம் 1 மணி நேரத்திற்கு எவ்வளவு தொகை என்கிற விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| 1.G.Murali, Civil works Contractor<br>26, Ramasamy Udaiyar Street<br>Vandavasi. | - ஒரு மணி நேரத்திற்கு - ரூ.950/- |
| 2.V.Sundarami,<br>Balakrishnan Street<br>Kesava Nagar,Vandavasi. | - ஒரு மணி நேரத்திற்கு - ரூ.1025/- |
| 3.P.Murugesan,<br>43, Dharmaraja Kovil Street<br>Vandavasi. | - ஒரு மணி நேரத்திற்கு - ரூ.1000/- |

அலுவலககுறிப்பு:-

1. மன்றம் முடிவு செய்யலாம்.

2. நகராட்சியில் உள்ள 24 வார்டு பகுதிகளிலும் சேகரமாகும் மக்காத குப்பைகள் எச்சூர் உரக்கிடங்கில் டம்பர்லாரி மற்றும் மினிலாரி மூலம் கொட்டப்படும் குப்பைகள் வாகனம் உட்செல்ல முடியாமல் சிதறி கிடப்பதால் அவசர அவசியம் கருதி JCB மூலம் அவற்றை ஒன்றாக சேர்க்க இதற்கு உண்டான வாடகை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. மேலும் தோராய செலவு ரூ.45,000/- மன்ற அனுமதி வைக்கப்படுகின்றது.

(ந.க.எண்.1846/2020/எச்1)

159. வந்தவாசி நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையம் அலுவலகத்தில் செயல்பட்டுவருகிறது. தலைமை நீரேற்று நிலையத்தில் உயர்மின் அழுத்தம் காரணமாக 75 HP மின் மோட்டாரின் பேனல்போர்டு, மின்சார மீட்டர் (அளவு மணி) மற்றும் அனைத்து மின் ஒயர்களும் எரிந்து விட்டதால் குடிநீர் விநியோகம் தடைபட்டு விட்டதால் குடிநீர் அவசியம் என்பதால் மின்வாரியத்தின் அறிவுறுத்தலின்படி நேரடி மின் இணைப்பு இயக்கிக்கும். எனவே அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்ட விதி 1920ன்படி பிரிவு 15ன்கீழ் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.75,000/- மன்ற அனுமதிக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு:-

1. மன்றம் பதிவு செய்யலாம்.

2. அவசர அவசியம் கருதி குடிநீர் அவசியம் என்பதால் 1920ன் சட்ட விதிகள் பிரிவு 15ன் கீழ் தோராய மதிப்பீடு ரூ.75,000/- க்கு மன்றம் அனுமதி அளித்தல்.

(ந.க.எண்.898/2020/இ1)

160. வந்தவாசி நகராட்சிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2019-2020ம் ஆண்டிற்கு கீழ்காணும் பணிகளுக்கு ரூ.58.80 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர் அவர்களின் செயல்முறை உத்திரவு எண்.அ6/5458/2019, நாள்.30.09.2020ல் நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவு வரப்பெற்றுள்ளதை மன்ற பார்வைக்கும், பதிவிற்கும், மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடுதொகை (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வந்தவாசி நகராட்சி வார்டு எண்.4, பாபாசாகிப்தெரு, சிமெண்ட்சாலை அமைத்தல் பணி | 3.00 |
| 2. | வந்தவாசி நகராட்சி வார்டு எண்.16, யாதவர் தெருவில் பொது விநியோக கடை கட்டிடம் கட்டுதல். | 13.80 |
| 3. | வந்தவாசி நகராட்சி வார்டு எண்.2, கோட்டை காலனி பகுதியில் சமுதாய கூடம் கட்டுதல். | 42.00 |
| | மொத்தம் | 58.80 |

அலுவலககுறிப்பு-

மன்றம் பதிவு அளித்தல்.

(ந.க.எண்.1678/2020/இ1)

161. வந்தவாசி நகராட்சியில் எல்லையின் அருகில் உள்ள ஸ்ரீதவளகிரிஸ்வரநாதர் கோயில் திரு கார்த்திகை தீபவிழா வருடாவருடம் வெகுசிறப்பாக நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு பொதுமக்கள் பெருமளவில் வருகை புரிந்ததால் பொதுமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மின் கம்பங்களில் புதியதாக LED விளக்குகள் பொருத்தவும், குடிநீர் வசதிகள் செய்து கொடுக்கவும், தோராய செலவினம் ரூ.30,000/- மன்றம் பதிவு செய்யலாம்.

அலுவலககுறிப்பு

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1002/2020/இ1)

162 வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட ,Supply and Fixing Street Light Water Supply accessories to Distribution lorry at Venkundram road in Vandavasi Municipality ஆகிய பணிகளை செய்து கொடுக்கும் பணிக்கு-பணி உத்தரவு வழங்குதல் தொடர்பாக.

| | | |
|---|---|---|
| 1.ஆ.அஜிஸ் | 0.02% | சதவீதம் மதிப்பைவிட குறைவு |
| 2.எம்.காளி | 0.15% | சதவீதம் மதிப்பைவிட அதிகம் |
| 3.இ.மஜீத் | 0.07% | சதவீதம் மதிப்பைவிட அதிகம் |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ. 0.02% சதவீதம் மதிப்பைவிட குறைவான விலைப்புள்ளிகொடுத்துள்ள ஆ.அஜிஸ் என்பவரின் விலைப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1002/2020/இ1)

163. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிவர் புயல் காரணமாக தாழ்வான பகுதிகள் மற்றும் குடிசை பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான பகுதிகளில் தங்கவைக்க தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களான பாய் மற்றும் தலையனை, டார்ச்லைட் வாங்கவும், மின்சாரம் இல்லாத நேரங்களில் பயன்படுத்தவும், அலுவலகங்களில் பயன்படுத்தும் மின்ஆக்கி (Generator) வாடகை அடிப்படையில் பயன்படுத்தவும், அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் படி மேற்கொண்டமைக்கு தோராய செலவினம் மதிப்பீடு ரூ.40,000/-க்கு மன்றம் பதிவு செய்யலாம்.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1003/2020/இ1)

164. வந்தவாசி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிவர் புயல் காரணமாக தாழ்வான பகுதிகள் மற்றும் குடிசை பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான பகுதிகளில் தங்கவைக்க தேவைப்படும் அத்தியாவசிய பொருட்களான பாய் மற்றும் தலையனை, டார்ச்லைட் வாங்கவும், மின்சாரம் இல்லாத நேரங்களில் பயன்படுத்தவும், அலுவலகங்களில் பயன்படுத்தும் மின்ஆக்கி (Generator) வாடகை ஆகிய பணிகளை செய்து கொடுக்கும் பணிக்கு-பணி உத்தரவு வழங்குதல் தொடர்பாக.

| | | |
|---|---|---|
| 1.ஆ.அஜிஸ் | ரூ.29,500/- மதிப்பைவிட | குறைவு |
| 2.எம்.காளி | ரூ.30,500/- மதிப்பைவிட | அதிகம் |
| 3.இ.மஜீத் | ரூ.32,000/- மதிப்பைவிட | அதிகம் |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ரூ.29,500/- மதிப்பைவிட குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள ஆ.அஜீஸ், என்பவரின் விலைப்புள்ளியினை மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியுடன் ஏற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1003/2020/இ1)

165. வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அண்மையில் நிவர் புயல் காரணமாக பெய்த மழையில் பாதிப்புக்கு உள்ளாக்கிய மேடுபள்ளம் சாலைகளை சரிசெய்யவும், கழிவுநீர் கால்வாய்களை சரிசெய்யவும் தாழ்வான பகுதிகளில் உள்ள மழைநீரை மின்மோட்டார் கொண்டு தண்ணீரை அகற்றுதல், காற்றின் காரணமாக வேரோடு சாய்ந்த மரங்கள், மரக்கிளைகள் மரம் அறுக்கும் இயந்திரம் கொண்டு மேற்கொள்ள தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் தோராய செலவினம் ரூ.50,000/-க்கு மன்றம் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.899/2020/இ1)

166. வந்தவாசி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அண்மையில் பெய்த மழையின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் சாலையில் ஏற்பட்டுள்ள மேடு பள்ளங்களை ஈரப்பதம் கொண்ட ஈரச்சாலைகளை சமன் செய்திட அவசரம் அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் தோராய செலவினம் ரூ.50,000/-க்கு மேற்கொள்ள மன்றம் பதிவுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.109/2020/இ1)

2/12/20

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்

வந்தவாசி நகராட்சி.

2-12-2020